**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**OS No. 126/2021**

04.02.2026 வா.சா. 1 ஜெயலட்சுமி க/பெ. செல்வராஜ்

சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை நான் எதற்காக போட்டுள்ளேன் என்று கேட்டால் என் மகளுக்கு கொடுத்த இடம் , நிலம் மற்றும் என்னுடைய பொருட்கள் எனக்கு வேண்டும் என்று போட்டுள்ளேன். எனக்கு இரண்டு மகள்கள். என் இரண்டு மகளுக்கு திருமணம் திருமணம் செய்துவைத்த காலத்தில் என் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் உயிருடன் இருந்தார். என் கணவர் மிலிட்டிரியில் பணிபுரிந்தார். அவர் எந்த ஆண்டு பணி ஓய்வு பெற்றார் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. என் கணவர் ஓய்வு பெற்ற போது பணிப்பலன்களை அவரே வைத்துக்கொண்டார் என்றால் இல்லை. பணிப்பலன் எவ்வளவு வந்தது என்றும், அதில் அவர் எவ்வளவு செய்தார் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஒரு பகுதி தொகையில் நகைகள் வாங்கி என் மகள்களுக்கு திருமணம் ஆனபோது அவர்களுக்கு கொடுத்துவிட்டார். என் மூத்த மகளும் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். என் மூத்த மகளான 2ம் வாதி தேவிகாமாட்சிக்கு கொஞ்சம் சொத்து வாங்கி கொடுத்தாரா என்றால் ஆமாம். 2ம் வாதி தேவிகாமாட்சிக்கு வாங்கிக்கொடுத்த சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக பிரச்சினை இல்லாததால் சேர்க்கவில்லை. தாவா சொத்துக்களில் ஒரு சொத்து கர்நாடகாவில் உள்ளது எனறால் சரிதான். மேற்கண்ட சொத்துக்களை வாங்குவதற்கு நான் நேரடியாக பங்களித்தேனா என்றால் நான் நேரடியாக கொடுக்கவில்லை. என் மருமகன் மூலம் கொடுத்தேன். அதுபோல் எதுவும் இல்லை என்றும், என் மகள் இறந்துவிட்டதால் நான் தவறாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா 2வது இனசொத்து ஒரு வீட்டுமனை ஆகும். தாவா 2வது இனசொத்துக்களை வாங்குவதற்கு நான் நேரடியாக பங்களித்தேனா என்றால் என் நிலத்தில் வந்த வருமானம், மாடுகள் மூலமாக வந்த வருமானம் மற்றும் என் கணவரின் பென்ஷன் ஆகியவற்றை கொண்டு உதவினேன். அவ்வாறு உதவியதற்கு எழுத்துபூர்வமான ஆதாரம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. என் மூத்த மகளுக்கு திருமணம் ஆகி 30 ஆண்டுகள் ஆகிறது. என் இளைய மகளுக்கு திருமணம் ஆகி 28 ஆண்டுகள் ஆகிறது. என் இளைய மகள் ஒரு மாற்றுத்திறனாளி என்றால் இல்லை. போளூரில் நான் என் மகளுக்கு வாங்கிக்கொடுத்த வீட்டுமனையின் அளவு என்ன என்று கேட்டால் தற்போது ஞாபகம் இல்லை. வீட்டுமனையின்

எண் என்ன என்று கேட்டால் தற்போது ஞாபகம் இல்லை. வீட்டுமனை அமைந்துள்ள நகரின் பெயர் என்ன என்று கேட்டால் தற்போது ஞாபகம் இல்லை. வீட்டுமனைகள் எந்த திசையில் உள்ளது என்று கேட்டால் ஒன்று கிழக்கு பார்த்தது போலவும், மற்றொன்று மேற்கு பார்த்தது போலவும் இருக்கும்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.